# தஞ்சாவூர் மாநகராட்சி

<table>
<tr><th>Date of Meeting</th><th>Serial Number and subject in the Agenda<br>( MEETING)</th><th>Decision of the City Corporation</th></tr>
<tr><td>31.08.2020</td><td>248. இம்மாநகராட்சியின் ஆணையாளர் அவர்களின் ஜூலை–2020ம் மாதத்திய நாட்குறிப்பு மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு :</u><br>பதிவு செய்யலாம். (ந.க.எண்.7826/2019/சி5)</td><td>பதிவு செய்யப்பட்டது</td></tr>
<tr><td>31.08.2020</td><td>249. தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட ராவ்பகதூர் அருளானந்தசாமி நாடார் ரோடு சர்வே எண்.2443, 2345 இடத்தில் தனியார் மாட்டுச்சந்தையின் உரிமத்தை புதுப்பிக்க திரு G. நூர் முகமது முஸமில், திரு G.S.சுல்தான் ஜெய்லானி, திரு G.சலாமத் ஜான் ஆகியோரது 2019–20 ஆண்டுக்கு புதுப்பிக்க கோரிய 24.07.2020–ம் தேதிய விண்ணப்பம் மற்றும் 2020–21–ம் ஆண்டிற்கு உரிமம் புதுப்பிக்க கோரிய 24.07.2020–ம் தேதிய விண்ணப்பங்கள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) தமிழ்நாடு மாநகராட்சிகளின் சட்டப்பிரிவுகளின்படி மேற்படி தனியார் மாட்டுச்சந்தை ஓர் ஆண்டுக்கு மொத்த வருமானத்தில் 15% சதவீதம் தொகை நிர்ணயம் செய்து வசூலிக்கலாம்.<br>2) 2019–20 மற்றும் 2020–21ம் ஆண்டிற்கு புதுப்பித்து உரிமம் வழங்கலாம். (ந.க.எண்.2543/11/அ6)</td><td>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>31.08.2020</td><td>250. இம்மாநகராட்சிக்கு தேவையான வகையில் அலுவலகத்தில் இயங்கி வரும் கணினிகளுக்கு Toners Refilling செய்து தர ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளது.
<table>
<tr><th colspan="2">நிறுவனத்தின் பெயர்</th><th>தொகை</th></tr>
<tr><td>1.</td><td>Kalai Systems, New Housing Unit, Thanjavur, Tamil Nadu - 613005</td><td>ரூ. 430/– (ஒரு எண்ணிக்கை)<br>(நானூற்று முப்பது மட்டும்)</td></tr>
<tr><td>2.</td><td>திரு Arunkumar, ON7 Communication, Thanjavur<br>Mobile No.7708949298.Email:on7systems@gmail.com</td><td>ரூ. 470/– (ஒரு எண்ணிக்கை)<br>(நானூற்று எழுபது மட்டும்)</td></tr>
</table>
மேற்கண்ட நிறுவனங்களில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Kalai Systems நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கிட மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.5242/2020/சி2)</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

**31.08.2020** | **251.**

இம்மாநகராட்சியின் வாசக சாலை மற்றும் அலுவலக குடியிருப்பு பகுதியில் தினசரி நாளிதழ்கள் சார்வு செய்யப்பட்ட பழைய பேப்பர்களை (சுமார் 52 கிலோ எடை கொண்டது) எடுத்து செல்லும் பணிக்கு 18.08.2020 அன்று இரண்டாம் முறையாக ஏலம் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஏலம் கோரி வரப்பெற்றுள்ள விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் | ஏலத்தொகை 1 கிலோ வீதம் |
|---|---|---|
| 1. | எஸ்.பால்ராஜ், பாலு இரும்பு கடை வியாபாரி, வண்டிப்பேட்டை, கீழவாசல், தஞ்சாவூர் | ரூ. 6.50/– (ஆறு ரூபாய் ஐம்பது பைசா) |
| 2. | பி.ஜயாகனி, ஸ்ரீ ஐயன்னார் ஏஜென்சீஸ், 3599, டபீர்குளம் ரோடு, தஞ்சாவூர் | ரூ. 7.00/– (ஏழு ரூபாய்) |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு பொது ஏலத்தொகையில் வரிசை எண்.2ல் கண்ட திரு பி.ஜயாகனி என்பவர் கூடுதலாக வரப்பெற்ற உயர்ந்தபட்ச ஏல கேள்வி கோரியுள்ளதை ஏற்று வேலை உத்தரவு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1) கூடுதலாக பொது ஏல ஒப்பந்தப்புள்ளி கோரிய திரு ஜயாகனி என்பவரது ஏல விலைப்புள்ளி உயர்ந்தபட்ச ஏலத்தொகையை அங்கீகரிக்கலாம்.
2) மாமன்ற முன் அனுமதியுடன் முழு தொகையும் அலுவலகத்தில் செலுத்திய பின்பு வேலை ஆணை வழங்கியதை அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.6202/2019/டி1)

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

---

**31.08.2020** | **252.**

இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.29 கொள்ளுப்பேட்டைத் தெருவில் உள்ள அஙகன்வாடி மையஙகள் இரண்டிலும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள பள்ளி குழந்தைகளின் நலன் கருதி தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.2,20,000/–ஐ (ரூபாய் இரண்டு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி நாள் 02.07.2020 வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணிக்கு 27.07.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு 2 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை பரிசீலனை செய்து முடிவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | சதவீதம் |
|---|---|---|---|
| 1. | திரு G.செந்தில்குமார், தஞ்சாவூர் | 1,81,619.50 | மதிப்பீட்டு தொகையை விட (–) 0.30% குறைவு |
| 2. | M/s.Shanpros Consulting & Contracting (OPC) P. Ltd., Nagapattinam | 1,83,047.50 | மதிப்பீட்டு தொகையை விட (+) 0.49% அதிகம் |

அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1) மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள மதிப்பீட்டு தொகையை விட (–) 0.30% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு G.செந்தில்குமார், ஒப்பந்ததாரர், தஞ்சாவூர் அவர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு வேலை உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.6202/2020/எம்சிஇ1)

**31.08.2020** **253.** இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 பள்ளியக்ரஹாரம் ஆதி திராவிடர் தெரு அங்கன்வாடி கட்டிடத்தின் தரைத்தளம் மற்றும் மேற்கூரை ஜன்னல்கள் பழுதடைந்த நிலையில் செயல்பட்டு வருகிறது. இக்கட்டிடத்தில் உள்ள கழிப்பறைகள் பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. மேற்படி அங்கன்வாடி கட்டிடத்தை சுற்றி சுற்றுச்சுவர் அமைக்க வேண்டியுள்ளது. மேற்படி அங்கன்வாடி கட்டிடத்தை சீரமைப்பதற்காக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.5,00,000/—ஐ (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி நாள் 03.07.2020 வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணிக்கு 31.07.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு 2 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை பரிசீலனை செய்து முடிவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | சதவீதம் |
|---|---|---|---|
| 1. | திரு C.ராதாகிருஷ்ணன், தஞ்சாவூர் | **4,40,611.04** | மதிப்பீட்டு தொகையை விட (–) **0.22**% குறைவு |
| 2. | திரு S.குழந்தைசாமி, தஞ்சாவூர் | **4,43,218.48** | மதிப்பீட்டு தொகையை விட (+) **0.37**% அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1) மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள மதிப்பீட்டு தொகையை விட (–) 0.22% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு C.ராதாகிருஷ்ணன், ஒப்பந்ததாரர், தஞ்சாவூர் அவர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு வேலை உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.6204/2020/எம்சிஇ1)

அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது

<table>
<tr><td>31.08.2020</td><td>254.</td><td>இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 பள்ளியக்ரஹாரம் மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் உள்ள சத்துணவு கூடம் தரைத்தளம், மேற்கூரை பழுதடைந்தும் மற்றும் அங்கன்வாடி பள்ளி கூரையின் ஒரு பகுதி இடிந்த நிலையிலும் உள்ளது. மேற்கண்ட கட்டிடமானது பள்ளி கட்டிடமாக உள்ளதினால், அதனை சீரமைக்க வேண்டிய அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு மேற்படி பள்ளி கட்டிடத்தை சீரமைப்பதற்காக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.4,00,000/—ஐ (ரூபாய் நான்கு இலட்சம் மட்டும்) ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி நாள் 03.07.2020 வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணிக்கு 31.07.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு 2 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை பரிசீலனை செய்து முடிவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரரின் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th><th>சதவீதம்</th></tr>
<tr><td>1.</td><td>திரு C.ராதாகிருஷ்ணன்,<br>தஞ்சாவூர்</td><td>3,50,734.95</td><td>மதிப்பீட்டு தொகையை<br>விட (–) 0.30% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு S.குழந்தைசாமி,<br>தஞ்சாவூர்</td><td>3,52,289.41</td><td>மதிப்பீட்டு தொகையை<br>விட (+) 0.14% அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு:</u><br>
1) மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள மதிப்பீட்டு தொகையை விட (–) 0.30% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு C.ராதாகிருஷ்ணன், ஒப்பந்ததாரர், தஞ்சாவூர் அவர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.<br>
2) பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு வேலை உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.6203/2020/எம்சிஇ1)</td><td>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது</td></tr>
<tr><td>31.08.2020</td><td>255.</td><td>இம்மாநகராட்சியில் பணிபுரியும் திரு கே.மூர்த்தி, செயல்திறன் பணியாளர் நிலை—II (மின் கம்பியாளர்) தொடர்ந்த வழக்கு எண்.WP.MD.1312/2020 சம்பந்தமான விசாரணைக்கு 20.01.2020 அன்று எடுத்துக்கொள்ளப்பட்டதில் வழக்கு தொடர்பாக சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை வழக்கறிஞர் திரு N.தீலிப்குமார், வழக்கறிஞர் என்பவர் ஆஜராகி உள்ளார்.<br>
இவ்வழக்கில் மாநகராட்சியின் சார்பில் எதிர் வாதுரை தயார் செய்தல் மற்றும் வழக்கறிஞர் கட்டணம் போன்ற செலவினத் தொகை ரூ.12,000/— வழங்கக்கோரி தனது 25.01.2020ம் தேதிய கடிதத்தில் கோரியுள்ளார். இதன்படி மேற்கண்ட கட்டணத்தை அன்னாருக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.</td><td>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | <u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மேற்கண்ட வழக்கறிஞர் கட்டணத்தை பொது நிதியில் இருந்து வழங்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கப்பட்டதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) திரு N.தீலிப்குமார், வழக்கறிஞர், மதுரை அவர்களின் பட்டியல் எண்.03/E3/Thanjavur Corporation/2020, Dt.25.01.2020. (ந.க.எண்.4190/2020/எம்சிஇ3) | |
| 31.08.2020 | 256. | தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.21 சீனிவாசபுரம் குப்பைக் கிடங்கில் குப்பைகள் கொட்ட வரும் இம்மாநகராட்சி வாகனங்களுக்கு பாதை அமைத்து கொடுப்பது மற்றும் தினசரி சேகரிக்கப்படும் குப்பைகளை JCB மற்றும் HITTACH இயந்திரங்களை கொண்டு சமன்படுத்துவது போன்ற பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.14,00,000/—ஐ (ரூபாய் பதினான்கு இலட்சத்தினை மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மேற்கண்ட பணிக்கென தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.14,00,000/—க்கு (ரூபாய் பதினான்கு இலட்சத்தினை மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினை 2020—2021 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) இப்பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி, மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.7403/2020/எம்சிஇ4) | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 31.08.2020 | 257. | தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.3 சுங்கான்திடல் (கோடியம்மன் கோவில் பிரிவு சாலை) சாலையானது போக்குவரத்திற்கு இடையூறாக குண்டும் குழியுமாக உள்ளது. மேலும் பள்ளியக்ரஹாரம் பகுதியில் பிரதான குழாய் அமைக்கும் பணி நடைபெற்று வருவதால் தற்போது பொது மக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் சுங்கான்திடல் சாலைப்பகுதியினை பயன்படுத்தி வருகின்றனர். எனவே சுங்கான்திடல் சாலையில் மிகவும் மோசமான சில பகுதிகளில் மட்டும் Advanced Patch Work பணிகளை மேற்கொள்வதற்காக தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.4,00,000/—ஐ (ரூபாய் நான்கு இலட்சம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மேற்கண்ட பணிக்கென தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.4,00,000/—க்கு (ரூபாய் நான்கு இலட்சம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம். | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | 2) மேற்கண்ட பணிக்கான செலவினை 2020–2021 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) இப்பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி, மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறுகியகால ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.7403/2020/எம்சிஇ4) | |
| 31.08.2020 | 258. | தஞ்சாவூர் மாநகராட்சியில் கொரோனா வைரஸ் நோய் தொற்று தடுப்பு பணிகளின் கீழ் பல்வேறு வகையான முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக தஞ்சாவூர் மாநகராட்சியில் கொரோனா நோய் தடுப்பு பணியில் ஈடுபட்டு வரும் மாநகராட்சியின் நிரந்தர மற்றும் ஒப்பந்த பணியாளர்களுக்கு (Frontline Workers) நோய் தொற்று கண்டறிதல் மற்றும் இலவச மருத்துவ சிகிச்சை முகாம் நடைபெற உள்ளதால், கொரோனா வைரஸ் நோய் தொற்று தடுப்பு பணியின் முக்கியத்துவம் மற்றும் அவசர அவசியம் கருதியும், அரசு கடிதம் எண்.74/JS(MA)/Finance (Salaries)/2020, நாள் 01.04.2020 கடிதத்தின்படி, ஒப்பந்தப்புள்ளி கோரி பணி செய்ய விலக்கு அளிக்கப்பட்டுள்ளதால், மருத்துவ சிகிச்சை முகாமிற்கு தேவைப்படும் வகையில், Latex Vinyl Print and cut 74 SQFT-74 எண்ணிக்கை, Latix Vinyl with Fourm display - 48 எண்ணிக்கை, Display (Steel) with flex 6 Pass-16 எண்ணிக்கையில் விளம்பர பதாதைகள் மற்றும் பிளக்ஸ் போர்டு அமைக்கும் பணிக்கு M/s. Senthamil Graipix Printers, தஞ்சாவூர் என்ற நிறுவனத்திடம் இருந்து பெறப்பட்ட குறைந்த விலைப்புள்ளியின் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளவும், இப்பணிக்காக ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.93,833/–ஐ (GST உட்பட) (ரூபாய் தொன்னூற்று மூவாயிரத்து எட்டு நூற்றி முப்பத்திமூன்று மட்டும்) அங்கீகரிக்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) இப்பணிக்கு உத்தேச செலவினம் ரூ.93,833/–க்கு (GST உட்பட) (ரூபாய் தொன்னூற்று மூவாயிரத்து எட்டு நூற்றி முப்பத்திமூன்று மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினை 2020–2021 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து கொரோனா நோய் தொற்று தடுப்பு பணி சிறப்பு நிதியிலிருந்து செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) இப்பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரி குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s Senthamil Graipix Printers, தஞ்சாவூர் என்ற நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>4) அரசு கடிதம் எண்.74/JS(MA)/Finance (Salaries)/2020, நாள் 01.04.2020 மாமன்றத்தின் பார்வைக்கு.<br>(ந.க.எண்.4795/2020/எம்சிஇ4) | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 31.08.2020 | **259.** தஞ்சாவூர் மாநகராட்சியில் பாதாள சாக்கடை பணிகளை Smart City திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்ய ரூ.93.68/– கோடி ஒதுக்கப்பட்டு ஒளிவு மறைவு அற்ற ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித்துறை அவர்களின் 13.06.2018–ம் தேதிய சீர்மிகு திட்ட உயர்மட்ட குழுவில் ஒப்புதல் பெறப்பட்டு இவ்வலுவலக வேலை ஆணை ந.க.எண்.6644/2018/இ1, நாள் 24.12.2018–ன்படி M/s. Keyem Engineering Enterprises, Chennai என்ற நிறுவனத்திற்கு வேலை ஆணை வழங்கப்பட்டு தற்போது பணிகள் நடைபெற்று வருகிறது.<br>இந்நிலையில் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மாநகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட பின்வரும் விபரப்படியான Zone எண்.1ல் M/s. VB Associates, Chennai அவர்களின் கடிதம் நாள் 21.10.2019–ல் சுங்கான்திடல், சத்திய கிருஷ்ணா நகர் ஆகிய பகுதிகளில் ஆழ் இறங்கு குழாய் அமைக்கவும், ஸ்ரீஹரி நகர் பள்ளியக்ரஹாரம் பகுதியில் பாதாள சாக்கடை பகிர்மான குழாய்கள் அமைத்து தர கோரி வரப்பெற்ற அத்தெருவாசிகள் கடிதம் நாள் 24.06.2020, அண்ணா நகர், சிவாஜி நகர் மேற்கு திரு M.ராதா அவர்களின் கடிதம் நாள் 29.05.2020, 02.07.2020 மற்றும் 24.07.2020, திரு R.நாகராஜன் மற்றும் பலர் ஆட்டுக்காரத்தெரு அவர்களின் கடிதம் நாள் 17.07.2020, திருமதி பரிமளா, கீழத்தெரு, டவுன் கரம்பை அவர்களது கடிதம் நாள் 06.07.2020, படைவெட்டியம்மன் கோவில் தெருவாசிகள் கடிதம் நாள் 24.06.2020, தெருவாசிகள், கீரைக்கொல்லை சந்து 44வது வட்டம் கீழ வண்டிக்காரத்தெரு அவர்களின் கடிதம் நாள் 17.03.2020, திரு N.மைக்கேல் வில்லவன் கோதை, பாத்திமா நகர், பாரதி தெரு அவர்களின் கடிதம் நாள் 10.03.2020, திருமதி S.பவுலின், பாத்திமா நகர், பாரதி தெரு அவர்களின் கடிதம் நாள் 10.03.2020, திருமதி V.யூட்டஸ் பென்ஹர், பாத்திமா நகர் அவர்களின் கடிதம் நாள் 10.03.2020, திரு வி.கிருஷ்ணமூர்த்தி முதல் குறுக்குத்தெரு, பாரதியார் நகர் அவர்களின் கடிதம் நாள் 27.02.2020, சிந்து நகர் குடியிருப்போர் நலச் சங்கம் தலைமை திரு R.ஜெயக்குமார் அவர்களது கடிதம் நாள் 17.03.2020 மற்றும் திரு D.ராஜப்பா, K.சத்யா மற்றும் சார்லி காலனி தெருவாசிகள் அருளானந்த நகர் முதல் குறுக்குத்தெரு அவர்களின் கடிதம் நாள் 31.07.2020ல் தங்கள் பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் அமைத்து தர கோரி வரப்பெற்ற கோரிக்கையின் அடிப்படையிலும் மற்றும் மக்கள் பிரதிநிதிகளின் நேர்முக அறிவுறுத்தலின் பெயரிலும் மேற்படி இடங்கள் அனைத்தும் நேரிடையாக தள ஆய்வு செய்யப்பட்டதில், மேற்படி தெருக்களில் கழிவு நீர் வெளியேற்ற இடவசதி இல்லாத காரணத்தினாலும், குறிப்பிட்ட அனைத்து மாநகராட்சிக்குட்பட்ட தெருக்களிலும், வீடுகளிலும் உள்ள மலம் மற்றும் கழிவு நீர் தெருக்களில் உள்ள திறந்த வெளி மழைநீர் வடிகாலில் தேங்கி கொசு உற்பத்தியாகி சுகாதார சீர்கேடு ஏற்படுவதாலும், உயர் நீதிமன்ற அறிவுரையின்படி கழிவு நீர் மற்றும் மனிதக்கழிவுகள் திறந்த வெளியில் செல்ல அனுமதிக்ககூடாது என்ற நிபந்தனையின் பேரிலும், பொது மக்கள் சுகாதாரம் கருதியும், பொது மக்களுக்கு அடிப்படை கட்டமைப்பு வசதிகளை செய்து கொடுக்க வேண்டிய அவசர அவசியத்தை கருதியும், சீர்மிகு நகர திட்டப்பணிகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் UGSS பணிகளை முழுமையாக | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | செய்து முடித்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதன் அவசியத்தை கருதியும், ஏற்கனவே சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் இப்பணியினை மேற்கொண்டு வரும் M/s. Keyam Engineering Enterprises, Chennai என்ற நிறுவனத்தின் மூலம் அதே நிறுவனம் சமர்ப்பித்த விலைவிகிதத்தில் அதே பணியின் கீழ் அனுமதிக்கப்பட்ட திட்ட நிதியின் கீழ் மேற்குறிப்பிட்ட விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் அமைக்கும் பணிகளை அங்கீகரிக்கவும், மேற்படி சில தெருக்களில் நிலத்தடி நீர்மட்டம் பூமியின் மேல் மட்டத்திலிருந்து 2 அடி ஆழத்தில் நீர் ஊற்று ஏற்படுவதாலும் ஆழ் இறங்கி வேலை செய்யும் போது இளகிய களி மண்ணாக இருப்பதால் நிலச்சரிவு ஏற்படுவதாலும் அவ்விடங்களில் RCC Precast ஆழ்துளை வாயில்கள் ஏற்படுத்தவும் மேற்படி RCC ஆழ்துளை வாயில் மதிப்பீட்டில் வகை செய்யப்படாததால் Supplemental ஆக செய்து பணி முடிவறிக்கையின் போது சேர்த்து நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளரிடம் உரிய அங்கீகாரம் பெறுவதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.6458/2020/எம்சிஇ4) | |
| 31.08.2020 | 260. உலக அளவில் அதிவேகமாக பரவி வரும் கொரோனா வைரஸ் நோய் தொற்று பரவுதலை உடனடியாக தடுக்க பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 51 வார்டுகளில் உள்ள தெருக்கள் மற்றும் அரசு அலுவலகங்கள், மருத்துவமனைகள், நீதிமன்ற வளாகங்கள் மேலும் பொது மக்கள் அதிக அளவு கூடும் இடங்கள் ஆகிய பகுதிகளில் 05.05.2020 முதல் 18.05.2020 வரையிலான 14 நாட்களுக்கு 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தண்ணீர் லாரிகளை நாள் வாடகைக்கு அமைத்து கிருமி நாசினிகள் தெளிக்கும் பணிகளை மேற்கொள்ள திரு T.மனோகர், ஒப்பந்ததாரர் தஞ்சாவூர் என்பவர் அளித்த குறைந்த விலைப்புள்ளியினை ஏற்றுக்கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br>தற்போது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவிப்பில், கொரோனா வைரஸ் நோய் தொற்று பரவுதலை தடுக்கும் விதமாக 18.05.2020 முதல் 31.05.2020 வரையிலான 14 நாட்களுக்கு ஊரடங்கு நீட்டிப்பு செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், திரு T.மனோகர், ஒப்பந்ததாரர் தஞ்சாவூர் என்பவர் தனது 18.5.2020 தேதிய கடிதத்தில் பழைய விலை விகிதத்திலேயே பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள சம்மதம் தெரிவித்துள்ளார்.<br>எனவே, இம்மாநகராட்சியில் உள்ள 4 மண்டலங்கள் மற்றும் மேற்கூறிய முக்கிய பகுதிகளில் நான்காம் கட்டமாக 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 6 எண்ணிக்கையிலான தண்ணீர் லாரிகள் மூலம் 19.05.2020 முதல் 31.05.2020 வரையிலான 13 நாட்களுக்கு கிருமி நாசினிகள் தெளிக்கும் பணிகளை மேற்கொள்ள அதே ஒப்பந்ததாரர் திரு T.மனோகர் என்பவர் மூலம் அதே விலை விகிதத்திலேயே பணிகளை மேற்கொள்ளவும், இதற்கான உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.12.27/– இலட்சத்தை அங்கீகரிக்கவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | <u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) இப்பணிக்கு உத்தேச செலவினம் ரூ.12,27,000/—க்கு (ரூபாய் பன்னிரண்டு இலட்சத்து இருபத்தி ஏழாயிரம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினை 2020—2021 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து கொரோனா நோய் தொற்று தடுப்பு பணி சிறப்பு நிதியிலிருந்து செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) இப்பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி அதே ஒப்பந்ததாரர் மூலம் அதே விலைவிகிதத்தில் பணிகள் மேற்கொள்ள திரு T.மனோகர், ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்கியதை மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.5623/2020/எம்சிஇ4) | |
| 31.08.2020 | 261. தஞ்சாவூர் மாநகராட்சியில் கொரோனா வைரஸ் நோய் தொற்று தடுப்பு பணிகளின் கீழ் பல்வேறு வகையான முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகள் முழுமைக்கும் வாடகை முறையில் லாரிகள் பயன்படுத்தப்பட்டு கிருமி நாசினி தெளிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஒவ்வொரு லாரியிலும் மின் மோட்டார்கள் பொருத்தப்பட்டும், கிருமி நாசினி தெளிக்கும் குழாய்கள் இரண்டு பக்கங்களிலும் பொருத்தப்பட்டும் கிருமி நாசினி தெளிக்கும் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.<br>இவ்வாறு பயன்படுத்தப்படும் ஒவ்வொரு லாரியிலும் மின்மோட்டார் இயக்குபவர் (ஒரு நபர்) மற்றும் கிருமி நாசினி தெளிப்பவர்கள் (இரண்டு நபர்) என மூன்று நபர்கள் பணி அமர்த்தபட வேண்டியதை கருத்தில் கொண்டு 20 எண்ணிக்கையிலான பணியாளர்களை தினக்கூலி அடிப்படையில் 04.05.2020 முதல் 17.05.2020 வரையிலான 14 நாட்களுக்கு பணி அமர்த்தி கிருமி நாசினி தெளிக்கும் பணிகளை மேற்கொள்ள தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.20899/2019/ஜி2, நாள் 28.09.2019 தெரிவித்துள்ளபடி பலதரப்பட்ட பணியாளர்களுக்கு (செயல்திறனற்ற பணியாளர்கள்) நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.385/— என்ற அளவில் ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டு, இப்பணிக்கு திரு T.மனோகர், ஒப்பந்ததாரர் அவர்களால் அளிக்கப்பட்டுள்ள குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி பணி உத்தரவு வழங்கப்பட்டு கிருமி நாசினி தெளிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br>இந்நிலையில் தற்போது கொரோனா நோய் தொற்று தடுப்பு பணியின் முக்கியத்துவம் கருதி 18.05.2020 முதல் 31.05.2020 வரையிலான 14 நாட்களுக்கு ஊரடங்கு நீட்டிக்கப்பட்டு தமிழக அரசால் செய்தி குறிப்பு வெளியிடப்பட்டுள்ளது. மேலும் திரு T.மனோகர், ஒப்பந்ததாரர் என்பவர் அதே விலை விகிதத்தில் பணியாளர்களை சப்ளை செய்ய 16.5.2020 அன்று சம்மதம் தெரிவித்து கடிதம் வழங்கி உள்ளார். எனவே கொரோனா வைரஸ் நோய் தொற்று தடுப்பு பணியின் முக்கியத்துவம் மற்றும் அவசர அவசியம் கருதி, தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 51 வார்டுகளிலும் கிருமி நாசினி தெளிக்கும் | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | பணிகளை மேற்கொள்வதற்காக 20 எண்ணிக்கையிலான பணியாளர்களை தினக்கூலி அடிப்படையில் 18.05.2020 முதல் 31.05.2020 வரையிலான 14 நாட்களுக்கு சப்ளை செய்யும் பணிக்கு ஏற்கனவே இப்பணியினை மேற்கொண்டு வரும் திரு T.மனோகர், ஒப்பந்ததாரர் என்பவர் மூலம் அதே விலை விகிதத்தில் பணியாளர்களை சப்ளை செய்திடவும், மேலும் இதற்காக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.1.22/– இலட்சத்தை அங்கீகரிக்கவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1) இப்பணிக்கு உத்தேச செலவினம் ரூ.1,22,000/–க்கு (ரூபாய் ஒரு இலட்சத்து இருபத்தி இரண்டாயிரம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினை 2020–2021 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து கொரோனா நோய் தொற்று தடுப்பு பணி சிறப்பு நிதியிலிருந்து செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) இப்பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி அதே ஒப்பந்ததாரர் மூலம் அதே விலைவிகிதத்தில் பணிகள் மேற்கொள்ள திரு T.மனோகர், ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்கியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.5848/2020/எம்சிஇ4) | |
| 31.08.2020 | 262. | கொரோனா வைரஸ் நோய் தொற்று தடுப்பு பணிகளின் கீழ், இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 51 வார்டுகளில் உள்ள அனைத்து தெருக்கள் மற்றும் அனைத்து அரசு அலுவலகங்கள், அனைத்து மருத்துவமனைகள், நீதிமன்ற வளாகங்கள் மேலும் பொது மக்கள் அதிக அளவு கூடும் இடங்கள் ஆகிய பகுதிகளில் 05.05.2020 முதல் 18.05.2020 வரையிலான 14 நாட்களுக்கு 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 7 எண்ணிக்கையிலான தண்ணீர் லாரிகள் கொண்டு கிருமி நாசினிகள் தெளிக்கும் பணிகள் மேற்கொள்ள, கொரோனா வைரஸ் நோய் தொற்று தடுப்பு பணியின் முக்கியத்துவம் மற்றும் அவசர அவசியம் கருதியும், அரசு கடிதம் எண்.74/JS(MA)/Finance (Salaries)/2020, நாள் 01.04.2020 கடிதத்தின்படி, ஒப்பந்தப்புள்ளி கோரி பணி செய்ய விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாலும், பணியின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டும் திரு T.மனோகர், ஒப்பந்ததாரர் என்பவரிடம் இருந்து (லாரி வாடகை, தண்ணீர் விலை, டீசல், ஓட்டுநர் மற்றும் துலக்குனர் சம்பளம் உட்பட) 4.5.2020 அன்று பெறப்பட்ட குறைந்த விலைப்புள்ளியின் அடிப்படையில் வாடகை முறையில் தண்ணீர் லாரிகளை சப்ளை செய்யும் பணியினை மேற்கொள்வதற்கும், இதற்காக ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.15,50,000/–ஐ (ரூபாய் பதினைந்து இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) அங்கீகரிக்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1) இப்பணிக்கு உத்தேச செலவினம் ரூ.15,50,000/–க்கு (ரூபாய் பதினைந்து இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினை 2020–2021 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து கொரோனா நோய் தொற்று தடுப்பு பணி சிறப்பு நிதியிலிருந்து செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம். | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | 3) இப்பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரி குறைந்த விலைப்புள்ளி சமர்பித்த திரு T.மனோகர், ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்கியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>4) அரசு கடிதம் எண்.74/JS(MA)/Finance (Salaries)/2020, நாள் 01.04.2020 மாமன்றத்தின் பார்வைக்கு.<br>(ந.க.எண்.5623/2020/எம்சிஇ4) | |
| 31.08.2020 | 263. | மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நேர்முக அறிவுரையின்படி கொரோனா வைரஸ் நோய் தொற்று தடுப்பு பணிகளின் கீழ், இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 51 வார்டுகளிலும் கிருமிநாசினி தெளிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகளை மேற்கொள்ள 15.04.2020 முதல் 03.05.2020 வரையிலான 19 நாட்களுக்கு 20 எண்ணிக்கையிலான பணியாளர்களை தினக்கூலி அடிப்படையில் சப்ளை செய்யும் பணிகளை மேற்கொள்ள கொரோனா வைரஸ் நோய் தொற்று தடுப்பு பணியின் முக்கியத்துவம் மற்றும் அவசர அவசியம் கருதியும், அரசு கடிதம் எண்.74/JS(MA)/Finance (Salaries)/2020, நாள் 01.04.2020 கடிதத்தின்படி, ஒப்பந்தப்புள்ளி கோரி பணி செய்ய விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாலும், பணியின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.20899/2019/ஜி2 நாள் 28.09.2019–ன்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தினக்கூலி ஊதியத்தினை அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.1,65,000/–ஐ (ரூபாய் ஒரு இலட்சத்து அறுபத்தைந்தாயிரம் மட்டும்) அங்கீகரிக்கவும், திரு T.மனோகர், ஒப்பந்ததாரர் என்பவரிடம் இருந்து 14.2.2020 அன்று பெறப்பட்ட குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று கொண்டு பணியாளர்களை தினக்கூலி அடிப்படையில் சப்ளை செய்யும் பணிகளை மேற்கொள்ள அனுமதித்ததை அங்கீகரிக்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1) இப்பணிக்கு உத்தேச செலவினம் ரூ.1,65,000/–க்கு (ரூபாய் ஒரு இலட்சத்து அறுபத்தைந்தாயிரம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினை 2020–2021 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து கொரோனா நோய் தொற்று தடுப்பு பணி சிறப்பு நிதியிலிருந்து செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) இப்பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரி குறைந்த விலைப்புள்ளி சமர்பித்த திரு T.மனோகர், ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்கியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>4) அரசு கடிதம் எண்.74/JS(MA)/Finance (Salaries)/2020, நாள் 01.04.2020 மாமன்றத்தின் பார்வைக்கு.<br>(ந.க.எண்.3001/2020/எம்சிஇ4) | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
